(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



11 சைவசமய பாடப்பரீட்சை : 2024

தரம் பதினொன்று

nselva.com

கால அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பின்வருவனவற்றுள் தூல பஞ்சாட்சரமாக அமைவது.
   1) நமசிவாய 2) சிவாயநம 3) திருநீறு 4) உருத்திராக்கம்
2. சமய, தத்துவ உண்மைகளை நிரூபிப்பதற்கு பின்பற்றப்படும் வழி முறைகளுள் அடங்காதது.
   1) பிரதியட்சம் 2) அநுமானம் 3) ஆப்தவாக்கியம் 4) தத்துவங்கள்
3. ''தியானித்தல்'' என்பதன் பொருள்
   1) விரதமிருந்தல் 2) சிந்தித்தல் 3) வழிபாடு 4) நிஷ்டை
4. சமூகத்தின் தேவையறிந்து செய்யும் அறச்செயல்.
   1) ஈகை 2) கொடை 3) ஒப்புரவு 4) கைம்மாறு
5. நவக்கிரகங்களில் சாயல் (நிழல்) கிரகம் எனப்படுவது.
   1) செவ்வாய் 2) சந்திரன் 3) வியாழன் 4) இராகு
6. சிவனுக்குரிய நட்சத்திரம் எது?
   1) உத்திரட்டாதி 2) திருவாதிரை 3) கார்த்திகை 4) அச்சுவினி
7. ஒருவர் இறந்து பெரும்பாலும் 30ஆம் நாளில் செய்யப்படும் அபரக்கிரியை எது?
   1) அந்தியேட்டி 2) வீட்டுக்கிருத்தியம் 3) திவசம் 4) சிராத்தம்
8. பஞ்சராத்திரம் என்ற ஆகமம் எந்நெறிக்கு உரியது?
   1) சைவம் 2) வைணவம் 3) சாக்தம் 4) சௌமாரம்
9. பூசல நாயனார் கோவில் கட்டிய இடம்.
   1) மலையில் 2) ஆற்றங்கரையில் 3) மனதில் 4) காட்டில்
10. அருணகிரியாரின் ''உம்பர்தருத் தேனுமணிக்'' திருப்புகழில் போற்றப்படும் கடவுள் யார்?
    1) சிவன், விநாயகர் 2) முருகன், சக்தி 3) சிவன், திருமால் 4) விநாயகர், முருகன்
11. ஆருத்திரா தரிசனத்திற்குரிய இறைவன்.
    1) சிவன் 2) திருமால் 3) முருகன் 4) விநாயகர்
12. சகலகலாவல்லி மாலை பாடியவர் யார்?
    1) குமரகுருபர சுவாமிகள் 2) தாயுமான சுவாமிகள்
    3) அருணகிரி நாதர் 4) கச்சியப்ப சிவாசாரியார்
13. சூரபன்மனது மகேந்திரபுரியை அழித்தவர்.
    1) சமுத்திரராஜன் 2) வீரவாகுதேவர் 3) ஆறுமுகக்கடவுள் 4) சயந்தன்
14. குங்கிலியக் கலய நாயனார் இறைவனை வழிபட்ட நெறி.
    1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்
15. ஒரு மண்டலம் எனக் குறிப்பிடப்படும் நாட்களின் எண்ணிக்கை.
    1) 18 2) 38 3) 48 4) 28

16. சுந்தரர் கைலைக்குச் சென்ற வாகனம் எது?
1) வெள்ளை அன்னம் 2) வெள்ளைக் குதிரை
3) வெள்ளை யானை 4) வெள்ளை மயில்

17. திருச்சாழல், திருத்தெள்ளேணம் என்ற பனுவல்களைப் பாடியவர்.
1) அப்பர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

18. புறச்சந்தான ஆசாரியர்களுள் அடங்காதவர்.
1) மெய்கண்டதேவர் 2) மறைஞான சம்பந்தர்
3) கச்சியப்பசிவாச்சாரியார் 4) உமாபதி சிவாச்சாரியர்

19. அருணகிரிநாதரின் நாவிலே எழுதப்பட்ட மந்திரம்.
1) சரவணபவ 2) நமசிவாய 3) நாராயணநம 4) ஓம்

20. கிறிஸ்தவ வேதாகமத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர்.
1) சுவாமி ஞானப் பிரகாசர் 2) பார்சிவல் பாதிரியார்
3) ஆறுமுகநாவலர் 4) தனிநாயகம் அடிகள்

21. ஆன்மா தான் செய்த நல்வினை, தீவினையில் அனுபவிக்கும் வினை.
1) பிரார்த்தம் 2) ஆகாமியம் 3) சஞ்சிதம் 4) சித்தாந்தம்

22. "ஆற்றோளின் ஐந்தின் உணர்வை உணரா" என்பதில் ஐந்து என்பது.
1) ஐம்புலன் 2) ஐம்பொறி 3) ஐந்திணை 4) பஞ்சாட்சரம்

23. ''சாதகன்" என்ற தகுதிக்கு இட்டுச் செல்லும் தீட்சை.
1) சமய தீட்சை 2) நிர்வாண தீட்சை 3) விசேட தீட்சை 4) ஆன்ம தீட்சை

24. முத்திக்கு இட்டுச் செல்லும் ஞானத்தை பழமெனக் கருதினால் கிரியையால் குறிப்பிடக்கூடியது?
1) காய் 2) அரும்பு 3) மலர் 4) வித்து

25. விநாயகர் தன் உதர பந்தமாக அணிந்திருப்பது.
1) அங்குசம் 2) நாகம் 3) ஆபரணங்கள் 4) மோதகம்

26. இலங்கையின் நாகர்களது பிரதான வழிபாட்டுத்தலமாக விளங்குவது.
1) திருக்கோணேச்சரம் 2) முன்னேஸ்வரம்
3) நகுலேஸ்வரம் 4) திருக்கேதீஸ்வரம்

27. அனுராதபுர இராஜதானியை நிறுவும் போது அந்தணர்க்கென சிவன் கோவிலை நிறுவியவர்.
1) பண்டுகாபயன் 2) தேவநம்பியதீசன் 3) எல்லாளன் 4) பராக்கிரமபாகு

28. 'சதுர்வேதி மங்கலம்' எனப்படும் கட்டிடம் கட்டப்பட்டதன் நோக்கம்.
1) சிவவழிபாட்டிற்கு 2) பிராமணர்களை குடியமர்த்த
3) வேத நெறிகளைக் கற்றுக் கொடுக்க 4) சோழ மன்னர்கள் ஓய்வெடுக்க

29. அமிர்தகழி மாமாங்க ஆலயத்தின் மூலவராக விளங்குபவர்.
1) விநாயகர் 2) இராமன் 3) சிவபெருமான் 4) முருகன்

30. ''வித்தியானுபாலன யந்திரசாலை" என்ற அச்சகத்தை நிறுவியவர்.
1) ஆறுமுக நாவலர் 2) சேர். பொன். இராமநாதன்
3) வை. விசுவநாதபிள்ளை 4) சி. வை. தாமோதரம்பிள்ளை

பின்வரும் நெறிகளுக்குப் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

A - மாணிக்கவாசகர்
B - சுந்தரமூர்த்தி நாயனார்
C - திருஞானசம்பந்தர்
D - திருநாவுக்கரசர்
E - சரியை
F - கிரியை
G- யோகம்
H - ஞானம்

31. சற்புத்திர மார்க்கத்தை கடைப்பிடித்தவரின் சரியான ஒழுங்கு.
1) AH 2) CF 3) DE 4) BG

32. இறைவனைத் தோழனாகக் கொண்டு அன்பு செய்தவரின் சரியான ஒழுங்கு.
1) BG 2) AH 3) CE 4) DF

33. சௌசத்துக்குப்பின் செய்யத் தக்கது.
1) மலசல மோசனம் செய்தல் 2) ஸ்நானஞ் செய்தல்
3) போசனம் செய்தல் 4) தந்த சுத்தி செய்தல்

34. பிரம்மா யாருடைய உந்திக் கமலத்தில் இருந்து உதித்தார்?
1) சிவன் 2) திருமால் 3) பராசக்தி 4) கணபதி

35. புகழேந்திப் புலவரால் எழுதப்பட்ட கதை.
1) ஆடக சவுந்தரி கதை 2) சித்திரபுத்திரனார் கதை
3) ஆண்டாள் கதை 4) சூரபன்மன் கதை

36, 37 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

A மாமாங்கப்பிள்ளையார்
B பொன்னாலை வரதராஜப் பெருமாள் } ஆலயம்
C வற்றாப்பளை கண்ணகை அம்மன்
D மண்டூர் கந்தசாமி கோவில்

E கொக்கட்டி மரத்திலான கொடிமரம்
F வைகாசி பூரணையில் பொங்கல்
G ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்
H குளக்கோட்ட மன்னன்

36. யாழ்ப்பாண சமயநிலை என்ற நூலில் நாவலரால் கூறப்பட்ட ஆலயம் தொடர்புடையது?
1) BH 2) AF 3) DE 4) CG

37. பாக்குத்தெண்டல் எனும் நிகழ்வு இடம் பெறும் ஆலயம்.
1) AE 2) CF 3) DH 4) BG

38. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும்..... என்ற பனுவல் மூலம் துதிக்கப்படும் கடவுள்.
1) இலக்குமி 2) துர்க்கை 3) சரஸ்வதி 4) பராசக்தி

39. பின்வரும் பாசுரங்களில் கச்சியப்பரால் பாடப்பட்டது?
1) சிந்திக்கிலேன் நின்று 2) மூவிருமுகங்கள் போற்றி
3) தூக்கும் பனுவல் துறை தோய்ந்த 4) தனம் தரும் கல்வி தரும்

40. பகவத்கீதையும் தம்மபதமும் எப் பொருள்பற்றிக் கூறுகின்றது.
1) துக்க நிவாரணம் 2) மனமாசுக்கள் நீக்குதல்
3) ஒழுக்கத்தில் நிலைபெறுதல் 4) ஆன்ம விடுதலை

(40 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வசனநடை கை வந்த வள்ளலார் எனப் போற்றப்படுவர் யார்?
2. பிரளயாகலருக்கு பரமசிவன் முத்தியருளும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
3. திருச்சிற்றம்பலக் கோவை பாடியவர் யார்?
4. ஞான வழிபாட்டைச் சாதித்து அனுபவமடைந்த ஞானிகள் அடையும் முத்தி எது?
5. பாலாவி எனும் மகிமை மிக்க தீர்த்தம் உள்ள தலம் எது?
6. சித்திரைமாத அத்த நட்சத்திரத்தில் இறைவன் திருவடியடைந்த சந்தான குரவர் யார்?
7. பஞ்ச பூதத்திலே அக்கினித் தலம் எங்கே உள்ளது?
8. திருத்தொண்டர் தொகை பாடியவர் யார்?
9. முருகப் பெருமானின் படைத்தலைவரின் பெயர் யாது?
10. ''அன்னசத்திரம் ஆயிரம் நாட்டல் புண்ணியமாகும்" எனக் கூறியவர் யார்?

(1 x 10 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "தனம்தரும் கல்வி தரும் ....." 2. "ஆத்தாளை எங்கள் ....."
3. "உம்பர் தருத் தேனுமணிக் ....." 4. "உண்ணும் சோறும் பருகும் ....."
5. "கண்டனன் தொழ மைந்தனை ....."

(5x 2 = 10 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களை எழுதுக.

1. "சீர்மை சிறப்பொடு நீக்கும் ....."
2. "தீவினை செய்தால் கெடுதல் ....."
3. "பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றல் ....."
4. இன்னாது இரக்கப்படுதல் ....."
5. "சொல்லுக சொல்லின் பயனுடைய ....."

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "சைவ மக்களாகிய நாம் சைவ விழுமியங்களைப் பின்பற்றி நடப்போமாக"

1. ஈகை, ஒப்புரவு என்பவற்றை விளக்குக.
2. ஈகை ஒப்புரவு என்பவற்றுக்கிடையேயான வேறுபாடு யாது?
3. பசிப்பிணி தீர்த்தல் தொடர்பான குறள் ஒன்றைத் தருக?
4. பாரதியார் கூறும் அறச் செயல்கள் 3 தருக?

(3+2+2+3=10 புள்ளிகள்**)**

2. "சிவசின்னங்கள் சிவபரானை நினைவூட்டுவதுடன் சைவர்களின் அடையாளச் சின்னங்களுமாகும்"

1. திருநீறு தயாரிக்கும் முறையை விளக்குக.
2. உருத்திராக்கம் முறையாக அணிவதால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக.
3. அகத்தே அணியும் சிவ சின்னம் எது? அது எத்தனை வகைப்படும், அவை எவை?
4. பஞ்சாட்சரத்தின் பெருமையை விளக்கும் நூல்கள் 4 தருக?

(2+3+3+2=10 புள்ளிகள்**)**

3. "சைவ சித்தாந்தத்தை வளப்படுத்தியவர்களுள் சந்தான குரவர்கள் முக்கியமானவர்களாவார்கள்"

1. ''பட்டகட்டையிற் பகற்குருடு போகின்றது" என யாரைப் பார்த்து யார் கூறினார்?
2. கொடிக் கவி பாடியவர் யார் ? அதன் சார்பு நூல் எது?
3. சிவஞான போதத்தின் ஆசிரியர் யார்? அதன் சார்பு நூல் எது?
4. உமாபதி சிவாச்சாரியரால் எழுதப்பட்ட 3 நூல்களைத் தருக?

(2+3+2+3=10 புள்ளிகள்**)**

4. "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

1. ஈழத்திலுள்ள சிவாலயங்கள் 4 தருக?
2. வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் உமையம்மையாக யாரை பிரதிஸ்டை செய்துள்ளார்கள்? இவ் ஆலயம் எத்தனை வீதிகளைக் கொண்டது?
3. மண்டூர் கந்தசாமி கோவிலில் நடைபெறும் பூசை முறையினை விளக்குக.
4. பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் தலவிருட்சம் தீர்த்தம் என்பவற்றைத் தருக? விஷ்ணு தெய்வத்தின் அவதாரங்கள் 2 தருக?

(2+3+3+2=10 புள்ளிகள்**)**

5. "அடியார்க்கு அடியரான எம் பெருமான் அடியாரைத் தேடி அருள்வான்"

பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

1.

	சுந்தரர்	மாணிக்கவாசகர்
பிறந்த இடம்		
இயற் பெயர்		
தொடர்புடைய மன்னன்		
முத்தியடைந்த தினம்		

2. சுந்தரர் நீள நினைந்தடியேன் பதிகம் பாடிய சந்தர்ப்பம் யாது?
3. வாதவூரனை சிறையிலிட்ட பாண்டிய மன்னன் அவரை வருத்தியதற்கான காரணம் யாது?
4. சுந்தரர் செய்த அற்புதங்கள் இரண்டை விளக்குக.

(4+2+2+2=10 புள்ளிகள்**)**

(3 x 10 = 30 புள்ளிகள்**)**